ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2299/09 - 2022 සැප්තැම්බර් මස 27 වැනි අඟහරුවාදා - 2022.09.27

2299/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MTR/LND/ACQUI/L01/4001.
காணி அமைச்சின் தொ. இல.: 4-3/12/2008/WS/280.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், 428A ஆம் இலக்க ருவன்எல்ல கிராம அலுவலர் பிரிவின் ஹிரிதெனி கந்த கிராமத்தில் அமைந்துள்ள மு. பி. மாறை 2889 அடிப்படை நில அளவைப் படத்தில் காணித் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப் பட்டுள்ள காணி மாத்தறை - மிரிஸ்ஸை நீர் விநியோகத் திட்டத்தை விருத்தி செய்வதற்காக மாளிகாதென்னை பழைய நீர் தாங்கிக்குப் பதிலாக புதிய நீர் தாங்கி ஒன்றை அமைப்பதற்காக காணிகள் எடுக்கப்படுகின்றன.

**அட்டவணை**

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: மாளிகாதென்னை; விபரம்: வீட்டுத் தோட்டத்தில் நீர் தாங்கி ஒன்று காணப்படு கிறது; உரிமை கோருபவர்: இளந்தாரிகே அந்த்ரயஸ்; விஸ்தீரணம்: 0.0051 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதி


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

களாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. என். கௌசல்யா குமாரி,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2022, செத்தெம்பர் 22.

EOG 09 - 0290

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.:
7/3/1/13/ருசிகம கெண்ட்வத்த/எடுத்11.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2015/VE/204.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் இலக்கம் 2266/54 மற்றும் 2022.02.10 ஆந் திகதி கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்ட குறித்த காணிக்கான பரிசீலனைத் திகதி மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்திகதி 2022.12.21 மு. ப. 10.00 மணி எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எச். எம். சீ. பி. ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
பல்லேபொல.

பிரதேச செயலகம்,
பல்லேபொல,
2022, செத்தெம்பர் 20.

EOG 09 - 0291

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.